**அசல் வழக்கு எண்: 197/2022**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 17th day of February 2026
வா.சா.1. ஆறுமுகம், த/பெ. சின்னகுழந்தை.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்து ஆதியில் எனது மூதாதியருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை நிரூபிப்பதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் தாவாச் சொத்து மற்றும் இதர சொத்துக்கள் பூர்வீக பாத்தியப்பட்டது என குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த பிற சொத்துக்களின் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் அப்பா பெயர் சின்னகுழந்தை ஆகும். அவர் உடன் பிறந்தவர்கள் பச்சியப்ப கவுண்டர், ரங்கசாமி கவுண்டர், அப்பாக் கண்ணு கவுண்டர் மற்றும் அவர்கள் சகோதரி ஒருவர் உள்ளார். அவர் பெயர் ஞாபகம் இல்லை. மேற்கண்ட எனது தந்தை உடன் பிறந்தவர்கள் மற்றும் சகோதரி ஆகியோரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்துக்கள் வாய்மொழிபாகம் 1990ம் வருடம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ள நிலையில் எந்த தேதியில் யார் யார் அதை பிரித்துக்கொண்டார்கள் என வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை நான் கூட்டாக அனுபவித்து வருவதாக சொல்லும் நிலையில் அதை நிரூபிப்பதற்கு வருவாய் துறை ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணமானது தாவா அ–அட்டவணை சொத்தில் 1வது அயிட்டம் சொத்து சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் சர்வே எண் 654/1A நிலமானது விஸ்தீரணம் 1.94 ஏர்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சர்வே எண் 654/2 நிலத்திற்கான வருவாய் துறை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 654/2 நிலத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. வழக்கில் சர்வே எண் 654/2ல் விஸ்தீரணம் 1.40 ஏக்கர் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா அ–அட்டவணை சொத்தில் சர்வே எண் 654/2 நிலத்திற்கான நான்கு மால்களும் தாவா ஆ–அட்டவணை சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் 654/2 நிலத்திற்கான 4 மால்களும் வேறு வேறாக குறிப்பிடப்பட்டுள்ளன என்றால் சரிதான். எனது முதல் மனைவி பெயர் நாகேஷ்வரி ஆகும். அவர் 1ம் பிரதவாதி யசோதாவின் மூத்த மகள்

என்றால் சரிதான். எனக்கும் முதல் மனைவி நாகேஷ்வரிக்கும் சிவா என்ற ஒரே மகன் உள்ளார். எனது முதல் மனைவி நாகேஷ்வரி ஓடிவிட்டார். அது சம்மந்தமாக நான் காவல் துறை புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது தந்தை சின்னகுழந்தை 1ம் பிரதிவாதி பெயரில் 1997ல் தாவா ஆ-அட்டவணை 1ம் அயிட்ட சொத்தை பொருத்து தான செட்டில்மெண்ட் 1ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு அது தெரியாது. அதேபோல் தாவா ஆ-அட்டவணை 2வது அயிட்ட சொத்தை பொருத்து எனது தந்தை 1ம் பிரதிவாதி பெயரில் ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தாவா ஆ-அட்டவணை சொத்தை நான் கூட்டாக அனுபவித்து வருவது சம்மந்தமாக ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாவா ஆ-அட்டவணை சொத்தை தனியாக அனுபவித்து வருவது தொடர்பாக வருவாய் துறை ஆவணங்கள் ஏதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் 1ம் பிரதிவாதி பெயரில் 26.09.1997 செட்டில்மெண்ட் எழுதிய போதும் 04.01.2005ம் தேதி உயில் எழுதிய விவரமும் எனக்கு நன்றாக தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக நான் தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் காலமானார். எப்போது இறந்தார் என ஞாபகம் இல்லை. எனது தந்தை இறக்கும் போது 1ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் மற்றும் உயில் எழுதப்பட்ட விவரத்தை என்னிடம் தெரிவித்து விட்டு தான் இறந்தார் என்றால் சரியல்ல. நான் தாவா அ-அட்டவணை சொத்தில் தான் பங்கு கோருகிறேன் என்றும் தாவா ஆ-அட்டவணை சொத்தை பொருத்து எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. ஆரணி வட்டார கோட்டாட்சியர் என்னை 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த மூத்த குடிமகள் கீழான மனுவில் என்னை அழைத்து விசாரணை செய்தாரா என்றாம் ஆமாம். அந்த மனுவில் இரு தரப்பினரையும் விசாரணை செய்து கோட்டாட்சியர் உத்தரவு போட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி யசோதா சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P.No.23298/2022ன் கீழ் மனு செய்து அதில் எனக்கு அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தான செட்டில்மெண்ட் பத்திரம் 15.12.1980ம் தேதி எனது பெரியப்பா ரங்கசாமி கவுண்டர் எனது அப்பா சின்னகுழந்தை கவுண்டருக்கு ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனவே

மேற்கண்ட சொத்து எனது தந்தையின் சுயசம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. தாவா அ–அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி யசோதா தான் பயிர் செய்து அதில் வீடு அஸ்திவாரம் அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தான் பயிர் செய்கிறேன். உண்மையில் தாவா சொத்து 1ம் பிரதிவாதி சுவாதீன அனுபவத்தில் உள்ளது என்றும் ஆனால் நான் தான் சட்ட விரோதமாக அவரது அனுபவத்தில் தலையிட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதியை அலைக்கழித்து துன்புறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி யசோதாவின் தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் நான் எந்த பாகமும் கேட்க இயலாது என்றும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மற்ற பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக அறிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |